மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 11

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. பின்வருவனவற்றுள் பண்புத் தொகையாக அமைவது

1. பவளவாய் 2. செவ்வாய் 3. அலைவாய் 4. அடைவாய்

02. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற தொகுதியைத் தெரிவு செய்க

1. பொருட்பெயர் : மனிதன், விலங்கு, மேசை
2. குணப்பெயர் : கருமை, வட்டம், சிவப்பு
3. காலப்பெயர் : கோடை, மார்கழி, காலை
4. தொழிற்பெயர் : நடத்தல், வந்தவர், ஆடல்

03. பின்வருவனவற்றுள் ஏவல் வாக்கியம்

1. கதவை மூடுங்கள் 2. அமைதி பேணுக 3. நாடகம் முடிவுற்றது 4. கள்ளமில்லா உள்ளம்

04. காலச்சக்கரம் என்பதில் வந்துள்ள புணர்ச்சி

1. தோன்றலும் திரிதலும் 2. கொடுதலும் தோன்றலும்
3. திரிதலும் கெடுதலும் 4. கெடுதலும் திரிதலும்

05. பின்வருவனவற்றுள் பெயர்ப் பகாப்பதம்

1. சால 2. முள் 3. தவ 4. நட

பகுதி 2
பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக

1. பேதைமை என்ற அதிகாரத்தில் பேதமை என்றால் என்ன என குறிப்பிடப்படுகின்றது?
2. “நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் பேணாமை என்ற குறளில் பேதையின் தொழில்களாக வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?
3. எவ்வாறான செயலை பேதைமையுள் எல்லாம் மிக்க பேதைமையாக குறிப்பிடுகின்றார்?
4. செயலை செய்கின்ற வகையறியாத பேதை அச்செயலை செய்தால் செயலின் விளைவு யாது என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
5. பேதையின் கைகளில் சேரும் செல்வத்தின் நிலை பற்றி வள்ளுவர் யாது கருதுகின்றார்?
6. பேதைமை என்ற அதிகாரத்தில் இடம்பெறும் உவமை அணிகளை இனங்கண்டு விளக்குக
7. பேதையர் நட்பு இனியது என வள்ளுவர் குறிப்பிடக்காரணம் என்ன?
8. “கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்” என்ற குறளை கொண்டு கூட்டி மீண்டும் எழுதுக
9. சங்ககாலத்தில் தோன்றிய பதினெண் மேற்கணக்கு நூல்களை எவ்வாறு வகைப்படுத்துவர்?
10. எட்டுத்தொகை நூல்களில் இரண்டினை குறிப்பிடுக